**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 425/2025**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அழகுராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சிவசுப்பிரமணியன் | தொழில் | : | முதல்நிலைக்காவலர் |
| கிராமம் | : | சுரண்டை | வயது | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 27th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆலங்குளம் காவல்நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஊத்துமலை காவல்நிலையத்தில் 2ம்நிலை காவலராக பணியில் இருந்தபோது, 23.08.2019ம் தேதி, 16.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு.நிஷாந்த் தலைமையில் நானும், காவலர் மாரிராஜன் ஆகியோர் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றபோது, தெற்கு காவலன்குறிச்சி சுடுகாட்டு ஓடையில் எதிரி 5 லிட்டர் கேனில் விஷச்சாராயம் வைத்திருந்தார். எங்களை பார்த்ததும் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து அவர் வைத்திருந்த கேனை திறந்து, முகர்ந்து பார்த்தபோது, அதிலிருந்து வித்தியாசமான வாடை வந்தது. இது சம்பந்தமாக மேற்படி நபரை விசாரித்தபோது, அவர் அரசு மதுபானக்கடைகளில் பிராந்தி வாங்கி வந்து, அதிக போதைக்காக அதில் ஊமத்தங்காய் சாறு பிழிந்து தண்ணீர் கலந்தும் விற்று வருவதாக கூறினார்.

எனவே, எதிரியை விஷப்பிராந்தி வைத்திருந்த குற்றத்திற்காக சார்பு ஆய்வாளர் கைது செய்தார். பகுப்பாய்விற்காக ஒரு பாட்டிலில் 300 மிலி அளவு விஷபிராந்தியை சார்பு ஆய்வாளர் மாதிரிக்காக எடுத்து SHO சீல் வைத்தார். மீதி திரவம் இருந்த கேனையும் SHO சீல் வைத்தார். அவர் கையில் வைத்திருந்த சில்வர் டம்ளர் ஒன்று, கையில் வைத்திருந்த பணம் ரூ.380/- ஆகியவற்றை அத்தாட்சி பிறப்பித்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். அத்தாட்சியில் தனிநபர் சாட்சிகள் யாரும் கையெழுத்திட முன்வராததினால் போலீஸ் பார்ட்டியாகிய நாங்களே கையெழுத்து செய்தோம். அத்தாட்சியிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகும். பின்னர், எதிரியையும், சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து சார்பு ஆய்வாளர் நிலைய குற்ற எண்.238/2019, சட்டப்பிரிவுகள் 4(1)(a), 4(1)(i) and 4(1-A) TNP Act-ன் படி வழக்கு பதிவு செய்தார். சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்வதற்கு நான் உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

பொதுமக்களை அழைத்த போது, யாரும் முன்வரவில்லை. காவலன்குறிச்சி வி.ஏ.ஓ, தலையாரியை சார்பு ஆய்வாளர் அழைக்கவில்லை. மாதிரி எடுத்தது போக மீதமிருந்த திரவத்தை அத்தாட்சியில் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. நிலைய புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரி மீது இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவமே நடைபெறவில்லை

என்பதினால் தான், பொதுமக்கள் யாரையும் நாங்கள் சாட்சியாக அழைக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed
by J CHRISTAL
BABITHA
Date: 2025.10.29
17:12:43 +0530